BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# நகர நிர்வாகமானது ப்ராம்ப்ட்டன் நகரில் நிகழ்ந்த ஏர் கனடா ஃப்ளைட் 621 விமான விபத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூறுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 25, 2020) – *ஏர் கனடா விமானம் 621* க்கு கிழக்கு ப்ராம்ப்ட்டனில் ஏற்பட்ட சோகமான விபத்தின் 50 வது ஆண்டு நிறைவை ஜூலை 5 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு, ப்ராம்ப்ட்டன் நகரம் நினைவுகூறும். இந்த துயரத்திற்கு ஆட்ப்பட்டவர்கள் ஆன்லைன் வீடியோ அஞ்சலியில் நினைவுகூறப்படுவார்கள், மேலும் அனைத்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகக் கட்டிடங்களிலும் தேசியக்கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கும்.

இந்த அஞ்சலி நிகழ்ச்சி www.brampton.ca/bramptonremembers வலைப்பக்கத்திலும், மற்றும் YouTube, Twitter, Facebook ஆகிய சமூக ஊடகங்களில் @CityBrampton ஐப் பின்பற்றியும் பெறலாம்.

சமுதாயத்தினர் தங்கள் செய்திகளை, நினைவுகளை மற்றும் இரங்கல் செய்திகளை ஆன்லைன் விருந்தினர் புத்தகமாகிய www.brampton.ca/bramptonremembers இல் பகிரலாம்.

**பர்ப்பிள் லிலாக் மெமோரியல் பார்க்**

விபத்து நிகழ்ந்து 50 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் விதமாகவும், மற்றும் விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், விபத்து நிகழ்ந்த 72 டிக்ரே டிரைவ் எனும் இடத்தில் அமைந்துள்ள *பர்ப்பிள் லிலாக் பார்க்* என்பது *பர்ப்பிள் லிலாக் **நினைவுப்** பூங்கா* என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பூங்காவில் உள்ள நினைவிடத்தில் லிலாக் மரங்கள் பூக்கின்றன; அங்கு பாதையில் இருக்கும் 109 கிரானைட் கற்கள் ஒவ்வொன்றும், விபத்தில் சிக்கி உயிரிழந்தவர் ஒவ்வொருவருக்கும் மரியாதை செலுத்துகின்றன. அங்கு நாட்டப்பட்டிருக்கும் ஒரு மிகப்பெரிய கிரானைட் அடிக்கல் மீது, விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல் செதுக்கப்பட்டு இருக்கிறது.

ஒன்ட்டேரியோ வம்சாவளிச் சட்டத்தின் கீழாக இந்தப் பூங்காவை ஒரு கலாச்சாரப் பாரம்பரிய வளாகமாக மாற்றும் பணியில் நகர நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

**பின்புலம்**

1970 ஆம் ஆண்டு, ஜூலை 5 ஆம்தேதி, ஏர் கனடா விமானத்தடம் 621 இல் ஒன்றில் பறந்த, டக்ளஸ் டிசி -8 ரக விமானம், காஸ்ஸில்மோர் எனும் கிராமத்தில் ஒரு விவசாய வயலில் விழுந்து நொருங்கியது. இப்போது விபத்து நிகழ்ந்த அந்த இடம் காஸ்ஸில்மோர் சாலை எனவும் மற்றும் மெக்வீன் டிரைவ்

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

எனவும் அழைக்கப்படுகிறது. மாண்ட்ரீயலில் இருந்து லாஸ் ஏஞ்சலஸ் சர்வதேச விமான நிலையத்திற்கு செல்லும் வழியில், திட்டமிடப்பட்ட ஒரு இடைநிறுத்தத்திற்காக இந்த விமானம் டொராண்டோ சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றது.

விமானத்தில் இருந்த 109 நபர்களில், 100 பயணிகள், ஒன்பது பணியாளர்கள் என அனைவருமே உயிரிழந்தனர். விபத்து நிகழ்ந்த சமயத்தில், ஏர் கனடா ஃப்ளைட் 621, கனடாவில் இரண்டாவது மிக மோசமான விமான விபத்து ஆகும். உலகெங்கிலும் இருந்த கனடா நாட்டு மக்கள் சம்பந்தப்பட்ட மிக மோசமான விமான விபத்துக்களில் இதுவும் ஒன்றாக கருதப்பட்டு வருகிறது. விபத்தில் உயிரிழந்தவர்களில் மாண்ட்ரீல் மற்றும் வான்கூவரில் இருந்து பயணித்த கனடா நாட்டு மக்கள் மற்றும் அமெரிக்கர்கள் அடங்குவர். விமானத்தட எண் 621 விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில், அடையாளம் காணப்பட்ட நாற்பத்தொன்பது பேரும் மற்றும் அடையாளம் தெரியாத மூன்று பேரும் டோரோண்டோவில் உள்ள மவுண்ட் ப்ளெசண்ட் கல்லறையில்  அடக்கம் செய்யப்பட்டனர். விபத்தில் பலியானவர்களில் மீதிப்பேர் மீட்கப்பட வில்லை.

ஏர் கனடா ஃப்ளைட் 621 விபத்து பற்றியும் நகரின் நினைவேந்தல் பற்றியும்  மேலும் தெரிந்துகொள்ள வருகைதரவும்:www.brampton.ca/bramptonremembers.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஏர் கனடா ஃப்ளைட் 621 ப்ராம்ப்ட்டனில் விபத்துக்குள்ளாகி, பலரின் வாழ்க்கையின் திசையைமாற்றியது. இந்த வேதனையான நினைவானது, ப்ராம்ப்ட்டன் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாகும். கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக கடுமையான உடல் ரீதியான சமூக விலகல் நடவடிக்கைகளை மனதில் கொண்டு, பர்ப்பிள் லிலாக் மெமோரியல் பார்க்-இல் மக்கள் முன்னிலையில் ஒரு நினைவேந்தலை நாம் நிகழ்த்த முடியாது. இந்த சோகத்தில் இழந்த உயிர்களை கவுரவிப்பதற்காக ஜுலை 5 ஆம் தேதியன்று ஆன்லைன் நினைவேந்தலில் எங்களுடன் இணையுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ”

- *பேட்ரிக் பவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஏர் கனடா விமானம் 621 விபத்தானது, ப்ராம்ப்ட்டன் நகரத்தினால் ஒருபோதும் மறக்க முடியாத ஒரு சோகமான நிகழ்வாகும். இழந்த உயிர்களுக்கும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் அஞ்சலி செலுத்த ஜுலை 5 ஆம் தேதியன்று ஆன்லைனில் எங்களுடன் இணையுங்கள். பர்ப்பிள் லிலாக் மெமோரியல் பூங்காவில் உள்ள நினைவுச்சின்னத்தைப் பார்க்க நீங்களாக அல்லது உங்கள் குடும்பத்தினருடன் பார்வையிட நான் உங்களை ஊக்குவிக்கிறேன். ”

- *பேட் ஃபோர்ட்டினி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“சோகமயமான ஏர் கனடா ஃப்ளைட் 621 விபத்துக்குள்ளாகி 50 ஆண்டுகள் ஆகிவிட்டன, ப்ராம்ப்ட்டன் நகரம் இதனை நினைவு கூறுகிறது. இந்த நிகழ்வுக்கு நாம் நேரில் வந்திருந்து அதனை நினைவுகூற முடியாது என்றாலும், பர்ப்பிள் லிலாக் மெமோரியல் பார்க் என்பது விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு ஒரு அழகான அஞ்சலியாகும். இதை அனுசரிப்பது பற்றிய வீடியோவைக் காண, மற்றும் விருந்தினர் புத்தகத்தில் கையொப்பமிட, ஜூலை 5 ஆம் தேதியன்று www.brampton.ca/bramptonremembers எனும் வலைப்பக்கத்திற்கு வரவும் ”

- *சார்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ஏர் கனடா ஃப்ளைட் 621 விபத்தின் 50 வது ஆண்டு நிறைவை நினைவுகூறுவதற்காக நாம் நேரில் ஒன்றுகூட முடியாமல் போகலாம் என்றாலும், இந்த நிகழ்வை நாங்கள் தொடர்ந்து நினைவில் வைத்திருப்பது முக்கியமாகும். விபத்தை நினைவுகூறும் வகையில் நகர ஊழியர்கள் ஒரு ஆன்லைன் மையத்தை உருவாக்கியுள்ளனர்; இது நினைவேந்தல் பற்றிய வீடியோ, விருந்தினர் புத்தகம் மற்றும் பலவற்றைக் கொண்டிருக்கிறது. நினைவேந்தல் வீடியோவானது, இழந்த உயிர்களையும், இந்த துயர சம்பவத்தால் தொடர்ந்து பாதிக்கப்படுபவர்களையும், உடனடியாக முதலில் உதவியவர்களையும், பயணிகளின் குடும்பங்களையும், விமானக் குழுவினரையும், அந்த நேரத்தில் அப்பகுதியில் வாழ்ந்தவர்களையும் கவுரவிக்கிறது. ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**

மோனிக்கா துக்கல்

ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு

யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்

ப்ராம்ப்ட்டன் நகரம்

905-874-3426 | Monika.Duggal@brampton.ca